Crl.Misc.39

# DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

**IN THE COURT OF THE DISTRICT MUNSIF -CUM- JUDICIAL MAGISTRATE, KRISHNARAYAPURAM**

CC.No. 125/2021

| | |
|---|---|
| | Prosecution PW1 |
| Deposition of Witness for | Defence |
| | Court |

| | | |
|---|---|---|
| Name | : | செந்தில்குமார் |
| Father's/Husband's Name | : | மூக்கன் |
| Village | : | |
| Taluk | : | |
| District | : | |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | 38 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 03.10.2023
எதிரி ஆஜராகியுள்ளார்.
<u>முதல் விசாரணை :-</u>

1. நான் வழக்கறிஞராக கிருஷ்ணராயபுரத்தில் பணிபுரிந்து வருகிறேன். கிருஷ்ணராயபுரம் கரூர் - திருச்சி தேசிய நெடுஞ்சாலையில் இந்தியன் மொபைல்ஸ் அன் ஏஜென்சிஸ் என்று கடையை நடத்தி வந்தேன். தினமும் நான் கடையை மூடிவிட்டு வீட்டுக்கு சென்றுவிடுவேன். கடந்த 17.08.2017ம் தேதி இரவு 10.00 மணிக்கு கடையை பூட்டுவிட்டு சென்றுவிட்டேன்.

2. அடுத்த நாள் காலை 9.00 மணிக்கு வந்து கடையை பார்த்தபோது கடையின் ஷெட்டரில் உள்ள பூட்டு உடைக்கப்பட்டிருந்தது. மேலும் என் கடைக்கு உள் சென்று பார்த்தபோது செல்போன்கள் கலைந்திருந்தது. மேலும் மொபைல் போன் என்னென்ன களவு போனது என்று பார்த்தபோது 10 மொபைல் போன், ஒரு லேப்டாப் மற்றும் VR box திருட்டுபோயிருந்தது.

3. திருட்டுபோன பொருட்களின் மொத்த மதிப்பு ரூ.1,00,000/- பெறும். அருகில் உள்ள நகைகடையில் உள்ள சிசிடிவி கேமராவில் பார்த்து செக் செய்தேன். அதில் ஆஜர் எதிரியின் வீடியோவில் பதிவாகியுள்ளது. தற்போது என்னிடம் காட்டப்படும் புகார் நான் கொடுத்ததுதான். அதில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான். அந்த புகார் அ.சா.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது. போலீசார் இவ்வழக்கு சம்பந்தமாக விசாரணை மேற்கொண்டனர்.

<u>குறுக்கு விசாரணை :-</u>

இல்லை.

Taken down by me in open court read over to the witness in the presence of the accused and admitted by the witness to be correct.

(S/d-G.Ashok Prasath)
District Munsif cum Judicial Magistrate,
Krishnarayapuram.

# DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

**IN THE COURT OF THE DISTRICT MUNSIF -CUM- JUDICIAL MAGISTRATE, KRISHNARAYAPURAM**

CC.No. 125/2021

| | |
|---|---|
| | Prosecution PW2 |
| Deposition of Witness for | Defence |
| | Court |

| | | |
|---|---|---|
| Name | : | மாரிமுத்து |
| Father's/Husband's Name | : | சுப்புரத்தினம் |
| Village | : | |
| Taluk | : | |
| District | : | |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | 33 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 03.10.2023
எதிரி ஆஜராகியுள்ளார்.
முதல் விசாரணை :-

1. நான் கரூரில் குடியிருந்து வருகிறேன். நான் கார்பரேசன் பணிக்கு சென்று வருகிறேன். நானும் அ.சா.1 ஆன செந்தில்குமாரும் சேர்ந்து திருச்சி - கரூர் தேசிய நெடுஞ்சாலையில் அமைந்துள்ள கிருஷ்ணராயபுரத்தில் இந்தியா மொபைல்ஸ் ஏஜென்சிஸ் என்ற கடை நடத்தி வருகின்றோம். கடந்த 17.08.2017 ம் தேதி இரவு 10.00 மணிக்கு கடையை பூட்டுவிட்டு சென்றுவிட்டோம்.

2. அடுத்த நாள் காலை 9.00 மணியளவில் கடைக்கு வந்து பார்த்தபோது கடையின் பூட்டு உடைக்கப்பட்டிருநதது. அதன் பிறகு கடைக்கு உள்ளே சென்றுபார்த்தபோது 10 மொபைல் போன் திருட்டுபோயிருந்தது. மேலும் லேப்டாப், VR Box திருட்டுபோயிருந்தது. மொத்தம் திருட்டுபோன பொருள் அனைத்தும் சுமார் ரூ.1,00,000/- பெறும்.

3.எங்கள் கடைக்கு பக்கத்தில் உள்ள பழனியப்பா நகைகடையில் வீடியோ புட்டேஜ் எடுத்து பார்த்தோம். அதில் ஆஜர் எதிரி பூட்டை உடைத்து திருடிய வீடியோ பதிவுகள் இருந்தது. மேலும் அ.சா.1 உடன் நானும் மாயனூர் காவல் நிலையம் சென்றோம். அங்கு அ.சா.1 புகார் அளித்தார். போலீசார் இவ்வழக்கு சம்பந்தமாக என்னை விசாரணை செய்தனர்.

<u>குறுக்கு விசாரணை :-</u>

இல்லை.

Taken down by me in open court read over to the witness in the presence of the accused and admitted by the witness to be correct.

(S/d-G.Ashok Prasath)
District Munsif cum Judicial Magistrate,
Krishnarayapuram.

# DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

**IN THE COURT OF THE DISTRICT MUNSIF -CUM- JUDICIAL MAGISTRATE, KRISHNARAYAPURAM**

CC.No.125 /2021

| | |
|---|---|
| | Prosecution PW3 |
| Deposition of Witness for | Defence |
| | Court |

| | | |
|---|---|---|
| Name | : | ராமநாதன் |
| Father's/Husband's Name | : | கதிரேசன் |
| Village | : | |
| Taluk | : | |
| District | : | |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | 42 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 03.10.2023
எதிரி ஆஜராகியுள்ளார்.
முதல் விசாரணை :-

நான் சித்தலவாயில்தான் குடியிருந்து வருகிறேன். நான் முருகப்பா என்ற நகைகடை நடத்தி வருகிறேன். கடந்த 18.08.2017ம் தேதி காலை 9.00 மணியளவில் எனது பக்கத்து கடையான இந்தியா மொபைல் ஏஜென்சிஸ் என்ற கடையின் பூட்டு உடைக்கப்பட்டிருந்தது. அந்த கடையில் போன், லேப்டாப் திருட்டுபோயிருந்தது. அதன் மதிப்பு சுமார் 70,000/- இருக்கும்.

2. என் கடையில் சிசிடிவி கேமராவில் உள்ள புட்டேஜ்சில் ஆஜர் எதிரி மேற்கண்ட செல்போன், லேப்டாப் திருடிய பதிவுகள் அதில் பதிவாகியிருந்தது. மேலும் என்னிடம் போலீசார் சிசிடிவி புட்டேஜ் பதிவுகளை வாங்கி சென்றார்கள். மேலும் அ.சா.1 மாயனூர் காவல் நிலையத்தில் புகார் அளித்தார். போலீசார் என்னை விசாரணை மேற்கொண்டனர்.

எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை :-

இல்லை.

Taken down by me in open court read over to the witness in the presence of the accused and admitted by the witness to be correct.

(S/d-G.Ashok Prasath)
District Munsif cum Judicial Magistrate,
Krishnarayapuram.